# கிருபையுள்ள வார்த்தை ®

**GRACIOUS WORD** Luke 4:22

**Vol - 15** | **July ஜூலை** | **2014**

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 9/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் **Betty Choate** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


சபை முக்கியமானது 3

தவறு செய்யும் கிறிஸ்தவர் 6

அதை செய்ய எனக்கு... 9

அந்நிய பாஷை... 11

யோசேப்பு... 14

சிறுவர் பகுதி 19


*In memory of*
**J.C. CHOATE**


ஆசிரியர் குழு

*Guest Editors :* **BETTY CHOATE**
**JERRY & PAULA BATES**

*Editor :* **PHILEMON RAJAH**

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.



**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi,
Madurai 625 016. India


**கிருபையுள்ள வார்த்தை**

**கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை அடையாளம் காட்டும் சத்திய வார்த்தை**

## கிருபையுள்ள வார்த்தை
# TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**


**ஞாயிறு**
காலை 6.45 மணி
**வெள்ளி**
காலை 6.00 மணி

பாருங்கள் ! பயன் அடையுங்கள் !

செய்தியாளர்கள்:
போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

நாகர்கோவில் வாசகர்கள்
**ARK T.V. யில்**
வெள்ளி மாலை - 6.30 மணிக்கு கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.




Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.78

# சபை முக்கியமானது

## Church is Important



**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

பிரியமானவர்களே! உங்கள் அனைவருக்கும் பரிசுத்த மீட்பராகிய ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள்!

அன்பானவர்களே ! தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மிடையே, சபையின் முக்கியத்துவம் பற்றி வித்தியாசமான கருத்துக்கள் மற்றும் எண்ணங்கள் உள்ளன. நம்மில் சிலர் ஞாயிற்றுக்கிழமை எப்பொழுது வரும் என்றும், சபைக் கூடுகைக்கு செல்ல வேண்டும் என்ற ஆவல் உள்ளவர்களாக இருக்கிறோம். ‘இன்னும் சிலர், ‘ஏன் ஞாயிற்றுக்கிழமை வந்தது, இன்னைக்கு சபைக் கூடுகைக்கு வேற போக வேண்டுமே’ என சலிப்புள்ளவர்களாக இருக்கிறோம். ‘லீவு ஒரு நாளைக்கு தான்; அன்று கூட எங்களை சுதந்திரமாக விடக்கூடாதா?’ என முறுமுறுக்கிறவர்களாக சிலர் இருக்கிறோம்.


சபையின் முக்கியத்துவம் பற்றி நமக்குள் வித்தியாசப்பட்ட சிந்தனைகள் இருந்தாலும், நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிற்கு சபை என்பது மிகவும் முக்கியமானது. ஆனால், அந்த முக்கியத்துவத்தை புரிந்துக்கொள்வதில், நாம் சாத்தானால் வஞ்சிக்கப்படும் அபாயம் இருக்கிறது. அந்த அபாயம் ஆராதனைக்கு வருகை குறைதல், ஜனங்கள் ஐக்கியத்தையும், மகிழ்ச்சியையும் வேறிடத்தில் நாடுதல் போன்றவைகளால் வெளிப்படையாக தெரிகிறது. நம்மில் அநேகருக்கு ‘கிறிஸ்து தேவை; ஆனால், அவருடைய சபை தேவையேயில்லை’ என நினைக்கிறோம்.

மதப்பிரிவுகள், கர்த்தருடைய சபையின் முக்கியத்துவத்தை தாக்கி தகர்க்கிறது. சபைக்குள் ஒருவரையொருவர் கண்டுக்கொள்ளாமை, வேதாகம அறிவு இல்லாமை, முறிந்த ஐக்கியம் போன்றவைகள் சபையின் முக்கியத்துவத்திற்கு எதிரான பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. இந்த இதழில் நாம், சபையின் முக்கியத்துவம் பற்றி படிப்போம். சபை எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் வேதாகமத்தின் உதவியுடன் அறிய, நம் மனதை ஆயத்தப்படுத்துவோம்.

**1. கிறிஸ்து தம் சுய இரத்ததித்னாலே சபையை வாங்கினார் :**

அப் 20:28 – ‘‘ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்”.

உங்கள் இரத்தம் உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது? அது உங்கள் வீட்டை விட மதிப்பானதா? அது உங்கள் வங்கி கணக்கை விட அதிக மதிப்புள்ளதா? அது உங்கள் வேலையை விட மதிப்பானதா? அப்படியானால், கிறிஸ்துவின் இரத்தம் அவருக்கு எவ்வளவு மதிப்புள்ளதாயிருக்கும்? அதற்கு நீங்கள் பதிலளிக்கும் போது, சபை எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்களே அறிந்துக்கொள்வீர்கள். ஏனென்றால், கிறிஸ்து சபைக்காக இரத்தம் சிந்தினார். நீங்கள் சபைக்காக உங்கள் இரத்தத்தை கொடுக்க வேண்டியிருந்தால், சபை எவ்வளவு முக்கியமானது என்பதற்கு அதுவே சிறந்த நிருபணமாயிருக்கும்.



கிறிஸ்து, மனித இனத்திற்கு எவைகளை எல்லாம் செய்ய விரும்புகிறாரோ, அவைகளை சபை மூலமாகவே செய்ய திட்டமிட்டிருக்கிறார்.

**2. சரீரமாகிய சபைக்கு கிறிஸ்து இரட்சகராயிருக்கிறார் :**

எபே 5:23 – “கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்”.

நீங்கள், நித்தியத்திற்கும் கிறிஸ்து உங்கள் இரட்சகராயிருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா? (எபி 13:20). அப்படியானால், நீங்கள் மரணபரியந்தம் உண்மையுள்ள அங்கத்தினராக இருக்க வேண்டும் (வெளி 2:10). மேலும், கிறிஸ்து நம்மை நித்தியமாக இரட்சிக்க, நாம் அவருடைய சபையில் அங்கத்தினராக இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது (பிலி 2:12). சபை, நமக்கும், நமது எதிர்காலத்திற்கும், நித்தியத்திற்கும் முக்கியமானதாகும் (2 பேதுரு 1:10).

**3. சரீரமான சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார் :**

எபே 1:23 – “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்”.

கிறிஸ்து, சபையின் நிறைவாகயிருக்கிறபடியால், நாம் பரிபூரணத்தால் நிறையப்பட வேண்டும் என்றால், அவருடைய சபையில் இருக்க வேண்டும். (எபே 3:14-19; பிலி 1:9-11; மத் 5:48). கிறிஸ்து மனித இனத்திற்கு எவைகளை எல்லாம் செய்ய விரும்புகிறாரோ, அவைகளை சபை மூலமாகவே செய்ய திட்டமிட்டிருக்கிறார். இது, தனிப்பட்ட முறையில் நமக்கு சபையை முக்கியமாக்குகிறது.

**4. சபையை அடையாளப்படுத்தும் வேதாகம உருவக நடைகள்:–**

நாம் சபையின் முக்கியத்துவத்தை காண மற்றுமொரு வழி, சபையை அடையாளப்படுத்தும் வேதாகம உருவக நடையை கவனிக்க வேண்டும்.

**சரீரமாகிய சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார்.** கொலே 1:18 – அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

சரீரம் தலையிலிருந்து பிரிந்து சென்றால், அது எவ்வளவு பயங்கரமான காட்சியாயிருக்கும். உங்கள் தலைக்கு உங்கள் சரீரம் முக்கியமானதா? ஆம் ! முக்கியமானதென்றால், அந்த அளவுக்கு சபை கிறிஸ்துவிற்கும் முக்கியமானது.


சபை முக்கியமற்றது என்று சொல்வது, சரீரத்திலிருந்து கிறிஸ்துவின் இரத்தத்தை பிரித்தெடுப்பது போன்றதாகும். இரத்தம் இல்லாத சரீரத்தை (பிணம்), நாம் பார்க்க சகிக்காது. நாம் சபையின் முக்கியத்துவத்தை குறைப்பது என்பது, அவருடைய இரத்தத்தை அவருடைய சரீரத்திலிருந்து நீக்குவதாகும்.

சபை முக்கியமற்றதென்றால், கிறிஸ்து ராஜ்ஜியம் அற்ற ராஜாவாக இருப்பார். சபை ராஜா அற்ற **ராஜ்ஜியமாக** இருக்கும். கிறிஸ்து ஆடுகளில்லா **(மந்தை)** மேய்ப்பராகவும், கொடியில்லாத **திராட்சை செடியாகவும்** இருப்பார். நாம் நமது சிந்தனையில் வேதாகமத்து மெய் சபையின் முக்கியத்துவத்தை உயர்த்துவோம்.

– உங்கள் சகோதரன்
**PCPR** (ஆசிரியர்)

# 21 தவறு செய்யும் கிறிஸ்தவர்

## THE ERRING CHRISTIAN



J.C. CHOATE

கடவுளை விட்டு தூரம் சென்ற பாவியான மனிதனுக்கு, தேவன் ஒரு தப்பிப்பதற்கான வழியை கொடுத்துள்ளார் என்பது அருமையான ஒன்று. ஆனால் சிலவேளைகளில், ஒரு ஆத்துமாவானது சுவிஷேசத்தின் முதன்மைக் கொள்கைகளுக்கு கீழ்படிந்தபின், பின்வாங்குதலும் உண்டு. அதனால் தான் இப்படிப்பட்ட கிறிஸ்தவரை நாம், தவறு செய்யும் கிறிஸ்தவன் (அல்லது) தவறு செய்யும் தேவ பிள்ளை என்று கூறுகிறோம்.

யாரோ ஒருவர் கேட்பது என்னவெனில் : " ஒரு மனிதன் கிருபையிலிருந்து விழுந்துவிட்டால், அவரை மீட்டுக்கொள்ள வழி உண்டா ?". "ஒரு மனிதன் கடவுளுடனான தன்னுடைய முதல் அன்பிற்கு திரும்ப என்ன செய்ய வேண்டும்?'' ''ஒரு கடவுளுடைய பிள்ளை (கிறிஸ்தவன்) அவரைவிட்டு பிரிந்த நிலையிலேயே தொடர்ந்து இருந்துவிட்டால், நித்தியமான இரட்சிப்பை அடைய முடியுமா?" இந்தக் கேள்விகளும், இதைப்போன்ற அநேக கேள்விகளும் காலந்தோறும் கேட்கப்படுகின்றன. ஆனால், இவைகட்கு வேதாகமத்தில் பதில் தயாராக இருப்பதினால், இவை எளிமையான கேள்விகள்.

ஒரு ஆத்துமா (மனிதன்) கடவுளைவிட்டு பிரிந்துபோவது என்பது வருத்தமான ஒன்று; ஆனால், அந்த ஆத்துமா அப்படிப்பட்ட நிலையிலேயே தொடர்ந்து வாழ்வது என்பது அதைவிட வருத்தமான ஒன்று. ஆதலால் நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், மந்தையில் இருந்து ஒருவர் பிரிந்துபோக நேரிட்டாலும், வேதாகமத்தில் (லூக் 15) கெட்ட வழிக்கு சென்று மகன் திரும்பி தன் தகப்பனிடம் வந்ததைப் போல, யார் ஒருவரும் கடவுளிடம் மனம் திரும்ப முடியும். உண்மைதான், இதை செய்வதற்கு, தேவனுடைய கற்பனைகளின் மீது விசுவாசமும், அதை நிறைவேற்ற தாழ்மையும் தேவை.

பரிந்துரைக்கப்பட்டபடி, ஒருவர் தான் கடவுளிடம் மறுபடியும் அன்பு கூற, அவருக்கு தேவ வார்த்தையின் மீது விசுவாசம் தேவை. மற்றொரு வார்த்தையில், தவறு செய்யும் கிறிஸ்தவர்களுக்கான தேவனுடைய திட்டத்தை ஒருவர் சரியாக புரிந்து ஏற்றுக்கொண்டு, அதை படிப்படியாக செய்ய வேண்டும். அதின் அர்த்தம் என்னவெனில், ஒருவன் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும், தாழ்மையுடன் தன்

தவறுகளை அறிக்கையிட வேண்டும், பின்பு தேவன் தன்மீது இரக்கம் வைத்து, தன் தவறுகளை மன்னிக்கும்படி அவரிடம் ஜெபம் செய்ய வேண்டும். “ ‘‘நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது’’ என்று யாக்கோபு கூறுகிறார் (யாக் 5:16). அப்.8ம் அதிகாரத்தில் நமக்கு உள்ள உதாரணம் என்னவெனில், அங்கே சீமோன் பாவம் செய்கிறார்; மேலும் அதற்கு யாக்கோபு சொன்ன வசனத்தின் பிரகாரமே பேதுருவும் அவரிடம் அறிவுரை கூறுகிறார். வசனத்தின்படி அவன் மன்னிப்பு பெற்று, தேவ திட்டத்திற்கு திரும்பினான். ஆம்! மனந்திரும்புகிற ஒவ்வொரு பாவம்செய்த கிறிஸ்தவர்களையும் மன்னிப்பதாக தேவன் வாக்களித்துள்ளார். ஆனால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில், தேவன் எங்குமே எப்பொழுதுமே அவருடைய மன்னிப்பின் நிபந்தனைகளுக்கு கீழ்படிய மறுப்பவர்களுக்கு, மன்னிப்பை தருவேன் என்று வாக்களிக்கவில்லை. இப்படி மன்னிப்பின் நிபந்தனைகட்கு கீழ்படிய மனதில்லாதவர்கள், தாங்கள் மட்டும் நித்தியத்தை இழப்பது மட்டுமின்றி மற்றவர்களையும் தங்களுடன் நரகத்திற்கு இழுத்து செல்வார்கள். இந்த உலகைவிட்டு கடந்து செல்ல என்ன ஒரு பரிதாபமான நிலை!

யார் தன்னுடைய தவறுகளை அறிக்கையிட வேண்டும்? ஏன்? பாவம் செய்த எல்லாருமே தான். ஆனால், ஒரு மனிதன் எல்லார் முன்பாகவும் பொதுவான பாவ அறிக்கை பண்ணவேண்டுமா? இல்லையா? என்பது, அவனுடைய பாவத்தை பொறுத்தது. ஆகையால் நாம் மனதில் கொள்வோம் : ஒரு மனிதனுடைய பாவம் எந்த அளவு வெளிப்படையானதோ, அந்த அளவு அவனுடைய பாவ அறிக்கையும் இருக்க வேண்டும். ஆகையினால், ஒரு தனி மனிதன், தன் இருதயத்தில் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தால், அவன் மனந்திரும்பி, தன்னை மன்னிக்கும்படி தேவனிடம் கேட்க வேண்டும். ஆனால், ஒரு மனிதன், தன் அயலானுக்கு விரோதமாக பாவம் செய்திருப்பின், அதை அவர் அந்த அயலானிடத்தில் வசனத்தின்படி சரி செய்து கொள்ள வேண்டும். மற்றொரு நிலையில், ஒரு தேவனுடைய பிள்ளையின் பாவத்தை ஒரு சமுதாயமே அறிந்திருக்குமேயானால், மேலும், அந்த பாவம் ஆண்டவருடைய பெயருக்கும் ஆண்டவருடைய மக்களுக்கும் அவமானத்தை கொண்டுவந்திருக்குமானால் (அத்தகைய பாவம் பொதுவானதாக இருக்கிற பட்சத்தில்), அந்த ஆத்துமா

அதை சபைக்கு முன் கொண்டுவந்து, சரியான ஆவியுடனே தன் தவறுகளை அறிக்கை செய்து, சபையையும் தேவனையும் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ள வேண்டும். இதுதான் வேதாகம முறை.

சில சகோதர சகோதரிகள் சபை கூடுகைகளில் பங்குபெறுவதில்லை; வேறு சிலர் பங்குபெறுவர், ஆனாலும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதில்லை. இதுவும், இப்படிப்பட்ட குற்றங்களும் எவ்வாறு மன்னிப்பு பெறும் எனில், அவர்கள் சபைக்கு முன் சென்று தங்கள் குற்றங்களை அறிக்கை செய்ய வேண்டும். ஒருவர் தன்னுடைய தவறுகள் சரிசெய்யப்படாத நிலையில், தேவனை ஆவிக்குரிய வகையில் சேவிக்க முடியாது.

ஆனாலும், எப்பொழுதுமே சிலர்,



தேவன், எங்குமே
எப்பொழுதுமே
அவருடைய மன்னிப்பின்
நிபந்தனைகளுக்கு கீழ்படிய
மறுப்பவர்களுக்கு,
மன்னிப்பை தருவேன்
என்று வாக்களிக்கவில்லை.

தாங்கள் சபைக்கு முன் சென்று தங்கள் பாவங்களை அறிக்கை செய்யும் அளவுக்கு தவறானவர்கள் (கெட்டவர்கள்) அல்ல என நினைப்பதுண்டு; சிலருக்கு பெருமை அதிகம்; மேலும் சிலர் உலகத்தை அதிகமாக நேசிப்பார்கள். ஆனாலும் ஒரு மனிதன் தேவனுடைய சித்தத்தை செய்ய தவறுகையில் அது தண்டனையையே பெற்றுத் தரும்.

எல்லாருமே கிறிஸ்தவராய் மாறவும், நிலைத்திருக்கவும் விரும்ப வேண்டும். ஆனால் ஒருவர், ஒன்று அல்லது மேற்பட்ட காரணங்களுக்காக வழிவிலகி சென்றிருப்பின், அவர் மீண்டும் கடவுளிடம் திரும்பி, அதை சரிசெய்து, எப்பொழுதுமே இரட்சகருக்கு உண்மையாக இருக்க வேண்டும். ஏனென்றால் பேதுரு இவ்வாறு கூறுகிறார் ‘‘அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும், அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது” (2 பேதுரு 2:21,22).

**- சகோ. கிங்ஸ்லி ராஜா**
**(தமிழில்)**

# அதை செய்வதில் எனக்கு விருப்பமில்லை

I'm Not Comfortable Doing that



JERRY BATES


இந்த வார்த்தைகளை நீங்கள் எப்போதாவது கேட்டது உண்டா? நீங்கள் எப்போதாவது கிறிஸ்தவர்களை வளரும்படி ஊக்கப்படுத்தி, புதிதாக எதையாவது செய்யும்படி கூறியது உண்டா? நீங்கள் நிச்சயமாக செய்திருப்பீர்கள். அப்போது அநேகர் கூறும் வார்த்தைகளே இவை. சில மக்களுடைய பிடித்தமான வார்த்தைகளில் மேலே உள்ளதும் ஒன்று. இந்த வார்த்தைகளை பயன்படுத்துவதில் மூலம் அவர்களுடைய எண்ணம் என்னவெனில், தங்களுடைய கடமை முடிந்துவிட்டது என்றும், தங்கள் நிலையை கடவுள் நிச்சயம் புரிந்து கொள்வார் என்றும், மேலும் தாங்கள் ஏற்கனவே செய்து கொண்டிருக்கும் பழைய சௌகரியமான காரியங்களை தொடரலாம் என்றும் நினைக்கின்றனர்.

அவர்கள் தவறாக புரிந்துள்ளனரோ என்று நான் ஆச்சர்யப்படுகிறேன். நான் மோசேயின் காலத்து காரியங்களை நினைத்துப் பார்க்கிறேன். தேவன் அனுமதியாத ஒரு காலத்தில், முன்பு மோசே இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து வெளியே அழைத்துவர முற்பட்டார். அதில் அவர் தோற்றுப்போய், பின்பு வனாந்தரத்திற்கு ஓடிப்போனார். காலப்போக்கில் அவர் புதிய வாழ்க்கை, புது குடும்பம், புது வேலை மற்றும் புதிய பொறுப்புகள் என இருந்துவிட்டார். அப்படி இருக்கும்போது ஒரு நாளில், தேவன் மோசேக்கு தரிசனமாகி, எகிப்திற்கு போய் இஸ்ரவேலரை வெளியே அழைத்துவரும்படி கூறினார். அப்போது மோசே தேவனிடம் பல சாக்குபோக்குகளை கூறினார்; பின்பு இறுதியில் உண்மையான காரணம் அவருடைய வாயில் இருந்து வந்தது. ‘‘பின்பு அவன் : ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான்” (யாத் 4:13). இதன் அர்த்தம் என்ன தெரியுமா? ‘‘ஆண்டவரே, எனக்கு எகிப்திற்கு போவதில் சௌகரியமில்லை. அதனால் அங்கு போக விரும்பவில்லை, வேறு யாரையாவது அனுப்பும்,” என்பதே.

மோசே, ஒரு குடும்ப தலைவனாகவும், மேய்ப்பனாகவும் தன்னுடைய வேலைகளில் மிகவும் சௌகரியமாக இருந்தான். தேவன் கோபமடைந்து, மோசேயினுடைய சாக்குபோக்குகளை ஏற்றுக்கொள்ளவில்லை. நம்முடைய இப்படிப்பட்ட நிறைய சாக்குபோக்குகளைப் பற்றியும் தேவன்

என்ன நினைப்பார் என நான் ஆச்சர்யப்படுகிறேன். ஒரு வேலை அத்தியாவசியமாக செய்யப்பட வேண்டும் என நமக்கு தெரிந்தும், நாம் அதை செய்வதில் விருப்பப்படவில்லை என்பதினாலேயே, அதை மற்றவர்கள் செய்யவேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். தமஸ்கு பட்டணத்தில் காத்திருந்த சபையை துன்பப்படுத்தினவனாகிய சவுலைப் பார்ப்பதற்கு அனனியா விரும்பவில்லை, ஆயினும் தேவனுடைய வேண்டுகோளின் பேரில் அவன் போனான். இயேசுவுக்கு சிலுவை விரும்பப்மானதாக இருந்ததா? இதற்கான பதில் தெளிவான ஒன்று ஏனெனில் அவர் விரும்பி சிலுவையை ஏற்றார்.

பேச்சுகுறைபாடு இருந்த ஒரு மனிதன் கிறிஸ்தவரான ஒரு உண்மை சம்பவத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டதை நான் நினைவுகூறுகிறேன். அவர் கிறிஸ்தவரானவுடனேயே சபைக்கு முன் ஜெபிக்கும்படி கூறப்பட்டார். நாம் எதிர்பார்க்கும்படியே அவர் சிறிது தடுமாறினார், ஆனாலும் ஜெபம் செய்து முடித்துவிட்டார். ஒரு நாள் அந்த சபையின் போதகர் வெளியூர் செல்ல வேண்டி இருந்ததினால், அவருடைய இடத்தை இந்த பேச்சு குறைபாடு உள்ள நபர் எடுக்க வேண்டியிருந்தது. அப்பொழுது அவர் படித்து ஒரு பாடத்தை ஆயத்தம் செய்திருந்தார் ; ஆனாலும் அது அவருக்கு கடினமான வேலை. அவர் மிகவும் பதஷ்டமாக இருந்ததினால் அந்த சனிக்கிழமை இரவு சரியாக தூங்கமுடியவில்லை; ஞாயிறு காலையில் களைப்புடன் காணப்பட்டார். பின்பு ஆராதனை முடிந்தவுடன் ஒருவர் அவரிடம், “ஏன் சிரமப்பட்டு இந்த முயற்சியை செய்தீர்கள்”? என்று கேட்டார். அதற்கு இவருடைய பதில் அற்பணிப்புடையதாக இப்படி இருந்தது, “இயேசு எனக்காக சிலுவையில் மரித்தார். நான் அவருக்காக செய்யக்கூடிய ஒரு சிறிய செயல் இது தான்'' என்றார். ஆம் பிரியமானவர்களே, நம்முடைய சௌகர்யமான நிலையில் இருந்து வெளியே வந்து எதையாவது நாம் செய்ய வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார் ; அப்படி செய்வதின்மூலம் நாம் வளர்ச்சியடைந்து, நமக்காக மரித்த இயேசுவுக்காக பெரிய காரியங்களை செய்ய முடியும்.



ஒரு மனிதனுடைய பாவம் எந்த அளவு வெளிப்படையானதோ, அந்த அளவு அவனுடைய பாவ அறிக்கையும் இருக்க வேண்டும்.

# 21 அந்திய பாஷை வரத்தின் நோக்கம் என்ன ?

அற்புத வரங்களை, பரிசுத்த ஆவி கொடுத்ததின் நோக்கம் என்ன? தேவனுடைய எந்த செயலின் பின்னணியிலும் ஏதோ ஒரு நோக்கமிருந்தது. எனவே அற்புத வரங்களை கொடுத்ததிலும் ஒரு நோக்கம் அவருக்கு இருந்திருக்க வேண்டும். அது தான் மாற்கு 16:20ல் சொல்லப்பட்டுள்ளது.''... அப்போஸ்தலர்களால் நடந்த அடையாளங்களினாலே (அற்புதங்களினாலே) வசனத்தை உறுதிப்படுத்தினார்." சரி! அந்நிய பாஷை வரத்தின் நோக்கம் என்னவாயிருந்தது ?

ஏற்கனவே குறிப்பிட்டபடி அந்நிய பாஷை, விசுவாசிகளுக்கு அடையாளமல்ல; அவிசுவாசிகள் மனந்திரும்ப, அவர்களுக்கு அது அடையாளமாயிருக்க வேண்டும். (1கொரி. 14: 22-26). அப்போஸ்தலர்களும், ஆதிசபை கிறிஸ்தவர்களும் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் (சகல மொழி பேசுபவர்களிடத்துக்கும்) பிரசங்கிக்க வேண்டியவர்கள் (மாற்கு 16:15 ; மத்.28:18,19). அவர்கள் போய் சகல நாட்டவர்களுக்கும் போதித்து சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுத்து, இயேசு போதித்த அனைத்து காரியங்களையும் கைக்கொள்ளச் செய்ய வேண்டும். (மத்தேயு 28:20). இதற்கு மொழி ஒரு தடையாக இருக்கக்கூடாது. எனவே பரிசுத்த ஆவியின் வரங்கள் மூலம் பெற்ற அந்நிய பாஷை வரத்தைக் கொண்டு, போதிக்க வேண்டிய கட்டாயத்தில் அவர்கள் இருந்தார்கள். ஆதலால் அந்நிய பாஷையில் பேசுவதற்குரிய வரம் அளிக்கப்பட்டது. அதன் மூலம் அவர்கள் பேசிய வார்த்தைகளெல்லாம் “தேவனுடைய வசனங்களே” என்று உறுதிபடுத்த வேண்டியிருந்தது.

அந்நிய பாஷை வரத்தின் நோக்கம் ஒரு விசுவாசியின் இரட்சிப்பை உறுதிபடுத்தவோ, பெறுவோர் தங்கள் ஆவிக்குரிய நீதியில் அதிக உணர்வடையவோ, மார்க்கரீதியான பக்தியை கூட்டத்தாரின் மத்தியில் தூண்டிவிடவோ, நேரடியாக ஆவிக்குரிய வளர்ச்சியை கொடுக்கும் பொருட்டோ, தங்களை மற்றவர்களை விட மேலானவர்களாக காட்டிக் கொள்ளவோ, இந்த வரங்கள் கொடுக்கப்படவில்லை. இது மனிதனுடைய நூதன உபதேசமேயன்றி தேவனுடைய வசனத்தின் போதனை அல்ல ! ''அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவித பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும்,'' (அன்று) அவர்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டது (2கொரிந்தியர் 12:12). இதைத்தான் எபிரேயருக்கு எழுதிய நிரூபத்தில், ''முதலாவதாக, கர்த்தர் மூலமாய்

அறிவிக்கப்பட்டு பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே, (அப்போஸ்தலர்களாலே) நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், தமது சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இரட்சிப்புக்கு'' முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. (எபிரேயர் 2:3,4). இதிலிருந்து அற்புத வரங்களின் முக்கியத்துவம், வசனங்களை, அதாவது இரட்சிக்கும் வல்லமையுள்ள வசனங்களை தேவனுடையது என்று உறுதிபடுத்துவது தான்.

அந்நிய பாஷை வரங்களினால், தாங்கள் கற்றுக் கொள்ளாத மாற்று மொழிகளில் பேசிக் காட்டுவது நோக்கமல்ல. அந்தப் பாஷைகளினால் தேவனைப் பற்றிய அறிவை உணர்த்துவதும், சபையை பக்தி விருத்தியடையச் செய்வதுமாய் அன்று இருந்தது. இயேசு தமது உலக ஊழியக் காலத்தில் அநேக அற்புதங்களுடன், தாம் பிதாவினிடத்திலிருந்து வந்தவர் என நிரூபிக்கும்படி செய்து, போதித்தார். அதின் நோக்கம் அவரை ஜனங்கள் விசுவாசித்து இரட்சிப்படைய வேண்டும் என்பதே (யோவான் 20:30,31). பிறகு அப்போஸ்தலர்கள் அற்புத அடையாளங்களுடன் போதித்தார்கள். அவர்களின் அந்நிய பாஷை, மாற்று மொழி பேசும் திறமையைக் காட்டவில்லை ; மாறாக, தேவனுடைய மகத்துவங்களைப் போதித்தார்கள் ; உறுதிபடுத்தி அவை தேவனுடைய வசனம், அதுவே இரட்சிப்பவை என்று நிரூபித்தனர் (அப். 2:11 ; மாற்கு 16:21 ; எபி : 2:3,4).


அவர்கள் மூலம் ஏவப்பட்டு எழுதப்பட்ட வசனம் இன்று போதிக்கப்படும்போது, ''அது உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது; "ஆதனால் "எந்த நற்கிரியையும்'' தேவனுடைய மனுஷர்கள் செய்து, தேறினவர்களாக மாற உதவி செய்கிறது. (2 தீமோத். 3 : 16,17). அற்புத வரங்களை தேவன் கொடுத்த நோக்கம் இப்படி நிறைவேறியிருக்கும்போது, இன்றும் அவைகளைப் பெறுவதாகக் கூறுவோர், "அபத்தமாதைப் பேசுகிறார்கள்.

இன்றும் பரிசுத்த ஆவியை நேரடியாகப் பெறுவதாகக் கூறுவோர், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவதாகக் கூறிதிரிகின்றனர். அது உண்மையானால், பின்னர் அவர்களே தண்ணீர் முழுக்கினாலும் ஞானஸ்நானம் பெறுகின்றனர். ஆக இவர்கள் இரண்டு ஞானஸ்நானங்களை பெறுவதாகக் கூறுகின்றனர். ஆனால் எபேசியர் 4 : 5ன் படி, ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள ''ஒரே ஞானஸ்நானம்'' வலியுறுத்தப்படுகிறது. இந்த ஒரே ஞானஸ்நானம் அவரது ஒரே சபைக்குள்

(சரீரத்துக்குள்) பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தை அப்போஸ்தலன் பவுல் வலியுறுத்துகிறார். (1 கொரிந்தியர் 12:12,13). மேற் குறித்த ‘‘பரிசுத்த ஆவியினால்” ஞானஸ்நானம் பெறுவது உண்மையானால் பிறகு தண்ணீர் ஞானஸ்நானம் என்று ஒன்றை அவர்கள் பெறுவது ஏன்? இரண்டு ஞானஸ்நானங்கள் அப்போஸ்தலருக்குப் பின்பு எங்கும் குறிப்பிடவில்லை. கொர்நெலியு வீட்டார் மட்டும், தீர்க்கதரிசன நிறைவேற்றத்திற்காகப் பெற்றனர் (அப் 10:44-48). அதற்குப் பின்பு இன்று வரை அமுலில் இருப்பது ஒரே ஒரு, தண்ணீர் ஞானஸ்நானம் மட்டுமே! எனவே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கூட, தீர்க்கதரினமாக (யோவேல் 2:28) ‘மாம்சமான யாவர்மேலும்’ எனும் அடையாளத்தின் நிறைவேற்றமாகவும், அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்ட மகத்தான பணியை நிறைவேற்றும் நோக்கத்திற்காகவுமே (அப் 1:16,17, அப் 2:32,33; 2:15-17). தேவனுடைய இந்த நோக்கத்தை யாரும் தனக்குரியது என்று எடுத்துக் கொள்ள முடியாது. ஆவிக்குரிய வரங்கள் அளிக்கப்பட்ட அன்றே ‘‘ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக் கொள்ளக்கடவன்’’ என்றார் (1கொரிந்தியர் 14:37). எனவே இன்றும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவதாக ஒருவன் கூறி, பிறகு தண்ணீர் ஞானஸ்நானமும் பெறுவதாகச் சொன்னால், அவன் கர்த்தருடைய கற்பனையை மீறுகிறான். ‘‘தண்ணீர் ஞானஸ்நானம் சடங்காச்சாரமாகப் பெறுகிற (கொடுக்கிற) ஒன்று. எனவே பரிசுத்த ஆவியினால் பெறுவது தான் எபேசியர் 4:5ல் குறிப்பிடும் “ஒரே ஞானஸ்நானம்” என்று ஒருவன் வாதிட்டால், அவன் அப்போஸ்தலர் 10:44-48 ல் சொல்லப்பட்டதையும், 1பேதுரு 3:21ல் சொல்லப்பட்டதையும் மறுதலிக்கிறவனாயிருக்கிறான். எதை நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்கள்?


(தொடரும்)

**– இ.ஏ. ஆறுமுகம்**
திண்டுக்கல்



நம்முடைய
சௌகர்யமான
நிலையில் இருந்து
வெளியே வந்து எதையாவது
நாம் செய்ய வேண்டும்
என தேவன் எதிர்பார்க்கிறார் ;

# யோசேப்பு ஒரு அருமையான மனிதன்



- சகோ. P.R. சாமி (பெங்களூரு)

இம்மாதத்தில் பாடத்தில் யோசேப்பைப்பற்றி கூறுகிறேன். மனித வரலாற்றிலே யோசேப்பின் சரிதை மிக அருமையானது. வேதாகமத்து மூதாதையர்களில் யோசேப்பும் ஒருவன். வாலிபப்பிராயத்திலேயே பல விதமான சோதனைகளை சந்தித்தவன். அதுவும் வீண்பழி சுமத்தப்பட்டு, மற்றோர் பொறாமைக்கு பலியான ஒரு வாலிபன். அவர்கள் சந்ததியின் மூலமாக எல்லா ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மூலமாய் தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறுதலுக்கு தானும் ஒரு கருவியாக பயன்படப்போவது இந்த யோசேப்புக்கு தெரியாது. இவன் தன் ஜீவியத்தில் மேன்மையாக வருவதற்கு எந்தவித தடயங்களும் காணப்படாவிட்டாலும், ஒரு உயர்ந்த ஸ்தானத்திற்கு உயர்த்தப்படுகிறான்.


அவன் ஜீவியத்தில் ஒன்றன்பின் ஒன்றாக சில சோகக்காட்சிகள் இடம் பெறுகின்றன. யாக்கோபுக்கு, ராகேல் மூலமாக அவன் முதிர்வயதில் பிறந்தவன். ராகேலின் செல்லப்பிள்ளை; யாக்கோபின் மறுமனையாட்டிகளின் குமாரரோடே, அதாவது தன் சகோதரர்களோடே யோசேப்பு இருந்து, ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது அவனுக்கு 17 வயது. தன் சகோதர்களுடைய துன்மார்க்கத்தை தன் தகப்பனுக்கு சொல்லி வருவான். அவன் சகோதரர்களுக்கு இது பிடிக்காமலிருந்தது. தகப்பனும், தன் குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து அவனுக்கு பல வருண அங்கியைச் செய்வித்தான். இதினிமித்தம் யோசேப்பை அவன் சகோதரர் பகைத்தனர். யோசேப்பு ஒரு செப்பனங்கண்டு அதை தன் சகோதரருக்கு அறிவித்தான். அதன் அர்த்தத்தை உணர்ந்து, அவர்கள் நீ எங்களை ஆளப்போகிறாயா? என்று சொல்லி யோசேப்பை பகைத்தனர். வேறொரு சொப்பனத்தை விவரிக்க, அதைக் கேட்ட அவன் தகப்பன் இந்தச்சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமா? என்று அவனைக் கடிந்து கொண்டான். அவன் சகோதரர் அவன் மேல் பொறாமை கொண்டார்கள்.

பொறாமை ஒரு நெருப்பை போன்றது. அது மற்றவனை அழிக்குமுன், இது

உள்ளவனும் அழிந்து போவான். பொறாமைக்கு முன்பாக யார் தான் நிற்பார்கள். தன்னிடத்தில் இல்லாத மேன்மை, சிறப்பு மற்றவர்களிடத்தில் காணும்போது, ஒருவனுக்குள் ஏற்படும் வயிற்றெரிச்சல் தான் இந்த பொறாமை. பொறாமை உள்ளம் கொண்ட இந்த சகோதரர்கள், யோசேப்பை தீர்த்துவிட எண்ணினர். ஆனால் தேவனோ யோசேப்பை தன் திட்டத்தில் எப்படி உபயோகப்படுத்துகிறார் என்பதுதான் இந்த சரிதையின் சாராம்சம். மனிதனுடைய திட்டம் வேறு தேவனுடைய திட்டம் வேறு. மனிதன் தேவனோடு போட்டி போட இயலுமா? அல்லது தேவ நோக்கத்தை அழித்து விடத்தான் முடியுமா?

யோசேப்பு ஒரு நாள், சீகேமிலே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் அவன் சகோதரர்களைப்பார்த்து அவர்களை நலம் விசாரித்துவிட்டு வர தகப்பனால் அனுப்பப்பட்டான். அவன் சென்று தேடி அவர்களை தோத்தானிலே கண்டு பிடித்தான். தூரத்தில் அவன் வருவதைக்கண்ட போது அவன் சகோதரர்கள், அவனைக் கொலை செய்யும்படி யோசனை பண்ணினார்கள். இதில் ரூபன் தலையிட்டு, அவனை கொல்லாமல் வனாந்தரத்திலுள்ள குழியில் போட்டு விடுங்கள் என்று யோசனை சொன்னான். அப்படியே எல்லோரும் சேர்ந்து யோசேப்பின் பல வருண அங்கியை கழற்றிவிட்டு, அவனை தண்ணீரில்லாத வெறுங்குழியில் போட்டார்கள். இன்னொரு சகோதரன் யூதா, யோசேப்பை அந்த வழியாக வந்த இஸ்மவேலர் வியாபாரிகளுக்கு விற்று போடும்படி யோசனைகூறி, அதன்படி எல்லாரும் செய்தனர். அவர்கள் யோசேப்பை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டனர்.

பிறகு அவனுடைய பல வருண அங்கியை எடுத்து, ஒரு வெள்ளாட்டு கடாவை அடித்து, அந்த அங்கியை இரத்தத்திலே தோய்த்து, தகப்பனிடத்தில் கொண்டு வந்து, துஷ்டமிருகம் யோசேப்பை அடித்துப் போட்டது என்று பொய் சொல்லி ஒரு நாடகமே நடித்து விட்டார்கள். யோசேப்பு செத்து விட்டதாக உண்மையிலேயே நம்பி யாக்கோபு அநேக நாள் தன் குமாரனுக்காக துக்கித்துக் கொண்டிருந்தான். உண்மையிலே யோசேப்பு இறந்து போயிருந்தாலும்,



சபை முக்கியமற்றது என்று சொல்வது, சரீரத்திலிருந்து கிறிஸ்துவின் இரத்தத்தை பிரித்தெடுப்பது போன்றதாகும்.

இதற்கு அதிகமாகவா துக்கம் கொண்டாடியிருக்கப் போகிறான். மேலாகவா நான் அப்பொழுது தவறான செயலைப் போலவே தவறான போக்கும் கண்டிக்கப்படத்தக்கதே.

எப்படியோ யோசேப்பைப்பற்றி தாங்கள் கூறிய பொய்யை தங்கள் தகப்பன் நம்பும்படி செய்து தங்கள் சகோதரனை வஞ்சம் தீர்த்துக் கொண்டனர். அந்த அளவுக்கு யோசேப்பு தீயவனா? இல்லை. இவர்கள் அவனைப்பற்றி கொண்டிருந்த கற்பனை தான் காரணம். இதற்கு காலமும் அது தரும் வேதனையும் தான் அவர்களுக்கு பதில் சொல்லும்.

இஸ்மவேலர்கள் யோசேப்பை வாங்கிக்கொண்டு போய் எகிப்து நாட்டில் ராஜாவின் பிரதானியும், தலையாரிகளுக்கு அதிபதியுமான போர்த்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள். ஒரு வீட்டில் அடிமை; பரிதாபமான நிலை நம் யோசேப்புக்கு. அநேகரைப்போல தனக்கு நேரிட்ட துர்ப்பாக்கியமான நிலையை குறித்து நினைத்து, அழுது தன்னை நொந்து கொள்ளவில்லை. யோசேப்பு அடிமையாக அந்த நாட்டில் இருந்தாலும், கண்ணியம் தவறாமல் நடந்து ஒரு கடமை வீரன் என்று பெயர் வாங்கி, போர்த்திபாரின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றான். இங்கும் ஒரு சோதனை வந்தது. போர்த்திபார் மனைவிக்கு அவன் மீது ஒரு கண்விழுந்தது. அவள் சாகசச் செயலுக்கு இணங்காமல் தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனான். யோசேப்பு நீச வாலிபர்களை போலில்லை. ‘சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அப்படிச் செய்தன. நானோ இளைஞன் என்ன செய்வது அவ்வளவு பெரிய இக்கட்டான சோதனையிலிருந்து தப்ப முடியலில்லை’ என்று கூறி அந்த சோதனைக்கு தன்னை ஒப்புக்கொடுக்கவில்லை.

யோசேப்பு போர்த்திபாரின் மனைவியைப்பார்த்து சொன்ன வார்த்தைகளை கேளுங்கள். ‘நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன் பட்டு தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி? என்றான். எப்படிப்பட்ட மனோநிலையுடையவனாக யோசேப்பு இருந்திருக்கிறான் பாருங்கள்! நமக்கு எப்பேர்ப்பட்ட சோதனை வந்தாலும், யாருக்கு எதிராக அந்த காரியம் செயல்பட்டாலும், அது தேவனுக்கு விரேதமான பாவம் என்ற உணர்வு மாத்திரம் இருந்தால், இன்றைய வாலிப உலகம், சீர்கேடான தங்கள் பாதையிலிருந்து காப்பாற்றப்படலாம். வலியச் சண்டைக்குப் போகக்கூடாது. ஆனால் வந்த சண்டைய விடக்கூடாது என்ற பழமொழி இங்கு செல்லுபடியாகாது. பிசாசானவன் நாம் நேர்மையான

பாதையைவிட்டு இடறிவிழ அனேக சோதனைகளைப் போடுவான். சோதனைக்கு இடம் கொடுப்பது சுலபம். ஆனால் சோதனையை எதிர்த்து நிற்பது அவ்வளவு சாமான்யமான காரியம் அல்ல. அதற்கு கடமை கண்ணியம் கட்டுப்பாடு மிக அவசியம் எல்லாவற்றுக்கும் மேலாக தேவபயம் நமக்கு இருக்க வேண்டும்.

யோசேப்பு, இந்த பெரிய சோதனையையும் கூட சமாளித்துவிடக் கூடிய அளவுக்கு நெஞ்சில் துணிவும் நேர்மையும் இருந்தது. போர்த்திபார் மனைவியும் அவனை விடவில்லை. தன் மோக இச்சைக்கு ஒப்புக் கொடாத அவனை, பழி வாங்க பொய் குற்றச்சாட்டுக்களை அவன் மீது போட்டு சிறைச்சாலைக்கு அனுப்புகிறாள்.

யோசேப்பு சிறைச்சாலையிலும் கூட, தன் நிலையை எண்ணி தன்னையே நொந்து கொண்டு, தன் கசப்பை யார் மீதாவது போட்டு தன் அங்கலாய்ப்பபை தீர்த்துக்கொள்ளலாம் என்று எண்ணாமல், 'வருவது வரட்டும் நான் என் நேர்மையான பாதையை விட்டு விலக மாட்டேன்' என்று உறுதி கொண்டவனாக, அங்கும் தன் உயர்ந்த குணத்தை வெளிப்படுத்தினான். இப்படிப்பட்டவர்களை தேவன் 'ஒரு நாளும் கைவிட மாட்டேன், என்கிறார். சோதனைகள் யாவருக்கும், வாலிபர் வயோதிகர் அனைவருக்கும் வரும். சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என்று வேதம் கூறுகிறது. இந்த சோதனை கட்டங்களே, யோசேப்புக்கு ஒரு பரீட்சையாக அமைந்து, தன் உத்தமத்தை உறுதிப்படுத்த உதவியாயிருந்தது. போர்த்திபார் கூட தன் மனைவியைக் காட்டிலும், யோசேப்பின் மீது மிகுந்த நம்பிக்கையை வைத்திருக்கக்கூடும். அதனால் தான் அப்படிப்பட்ட பெரிய குற்றம் சாட்டப்பட்டவனை கொல்லாமல், சிறையில் தள்ளி விடுகிறான்.

இப்படியாக யோசேப்பு சென்ற இடமெல்லாம் மற்றவர்களுடைய நம்பிக்கைக்கு பாத்திரவானாக நடந்து கொண்டிருக்கிறான். ஆகவே தான் மற்றவர் அன்பையும் நன்மதிப்பையும் பெற்று வந்திருக்கிறான். தேவனுடைய ஒத்தாசையையும் பெற்றான். அதற்கு பாத்திரனாக விளங்கி இருக்கிறான்.

அன்புள்ள நண்பனே! நீயும் தேவ ஒத்தாசை பெற்று, சோதனைகளின் மத்தியில் ஒரு வெற்றியுள்ள ஜீவியத்தை காண வாஞ்சித்தால், உன்னை தேவனுக்கு ஒப்புக்கொடு! எல்லா சோதனைகளையும் தாங்கி நமக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து, நம் வெற்றிக்கு ஒரு மாதிரியாக இருக்கிற தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து அவை ஏற்றுக்கொள். தேவன் உங்களோடிருப்பாராக!

## பொதுவான செய்திகள்

**உங்கள் உடல் மேல் உங்களுக்கு அக்கறை இருக்கிறதா....?**

நமது உடலில் உள்ள முக்கியமான 12 உறுப்புகளில் ஒவ்வொன்றும், 2 மணி நேரம் அதனுடைய உயர்சக்தி ஓட்டத்தின் உச்சத்தில் இருக்குமாம். அப்பொழுது செய்ய வேண்டியவை செய்யக்கூடாதவை:-

**1. நுரையீரல்** : (அதிகாலை 3:30 முதல் 5 மணி வரை) நுரையீரல் சுறுசுறுப்பாக இயங்கும் நேரமிது. இந்த நேரத்தில் எழுவது, உடல் நலத்திற்கு மிகவும் நல்லது. மூச்சிப்பயிற்சி, தியானம் செய்ய உகந்த நேரம்.

**2. பெருங்குடல்** : (அதிகாலை 5 முதல் 7 மணி வரை) இந்த நேரத்தில் கண்டிப்பாக எழுந்திருக்க வேண்டும். எழுந்திருப்பவர்களுக்கு மலச்சிக்கல் வராது. குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். இதனால் நரம்புத்தளர்ச்சி ஏற்படாது.

**3. வயிறு** : (காலை 7 முதல் 9 மணி வரை) கண்டிப்பாக காலை உணவை முடிக்க வேண்டிய நேரமிது.

**4. மண்ணீரல்** : (காலை 9 முதல் 11 மணி வரை) சிறிய அளவில் கூட சிற்றுண்டி, குளிர்பானங்கள் அல்லது தண்ணீர் கூட சாப்பிடகூடாது. சாப்பிட்டால் மண்ணீரல் பாதிப்பு ஏற்படும் உடலில் உஷ்ணம் அதிகரிக்கும்.

**5. இதயம்** : (நண்பகல் 11 முதல் 1 மணி வரை) கடினமான வேலை ஏதும் செய்யாமல் தண்ணீர் மட்டும் குடித்து உடலை சாந்தப்படுத்திக் கொள்ளலாம்.

**6. சிறுகுடல்** : (பிற்பகல் 1 முதல் 3 மணி வரை) மதிய உணவை முடித்து 5 நிமிடங்கள் கண்களை மூடி ஓய்வு எடுக்கலாம். படுத்து உறங்குவதை தவிர்க்க வேண்டும்.

**7. சிறுநீர்** : (பிற்பகல் 3 முதல் 5 மணி வரை) பானங்கள் அல்லது தண்ணீர் அருந்த சரியான நேரம்.

**8. சிறுநீரகம்** : (மாலை 5 முதல் 7 மணி வரை) வழக்கமான வேலையிலிருந்து விடுபட்டு, இரவுக்கு முன்பாகவே வீடு வந்து சேர வேண்டும்.ம

**9. இதய மேலுறை** : (இரவு 7 முதல் 9 மணி வரை) இந்த நேரத்தில் கண்டிப்பாக இரவு உணவை முடித்திருக்க வேண்டும்.

**10. மூன்று வெப்பமூட்டி** : (இரவு 9 முதல் 11 மணி வரை) காலை முதல் மாலை வரை உழைத்து, களைத்து உறுப்புகளுக்கு ஓய்வு தர வேண்டிய நேரம்.

**11. பித்தப்பை** : (நடுநிசி 11 முதல்1 மணி வரை) கண்மூடி கண்டிப்பாக உறங்கும் நேரம் இது. இந்த நேரத்தில் விழித்திருந்தால், அடுத்த நாள் உங்கள் முழு சக்தியையும் இழக்க நேரிடும்.

**12. கல்லீரல்** : (அதிகாலை 1 முதல் 3 மணி வரை) ஆழ்ந்த நித்திரையில் இருக்க வேண்டும். இந்த நேரத்தில் விழித்திருந்தால் கண்ணின் பார்வை சக்தி குறையும்.

- Selected

# 1 சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ

ஹாய் குட்டீஸ்! முன்னொரு காலத்தில் பாபிலோன் என்ற நாட்டை நேபுகாத்நேச்சர்னு ஒரு ராஜா ஆண்டு வந்தார். அவர் 60 முழ உயரமும், 6 முழ அகலமுமான ஒரு பெரிய தங்க சிலையை செய்து. அதை தான் எல்லாரும் வணங்கணும், அதற்கு தான் பூஜை செய்யனும், அப்படி செய்யாதவர்களை பிடிச்சு எரிகிற அக்கினியில போடச்சொல்லி கட்டளை போட்டாராம்.

அதனால் மக்களெல்லாம் ராஜாவினுடைய கட்டளையின்படியே அந்த தங்க சிலையை பணிந்துக்கொண்டார்கள். ஆனால், தேவனுடைய மக்களாகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற 3 அண்ணன்கள் மட்டும் அப்படி செய்யவில்லை. அதனால் அவர்களை நேபுகாத்நேச்சர் ராஜா முன்பாக நிறுத்தினாங்க.

ராஜா அவர்களை அக்கினியிலே போடுவதற்கு முன்பாக மீண்டும் ஒரு Chance கொடுத்தாரு. ஆனால் அந்த 3 அண்ணன்களும், 'நாங்க வணங்குகிற பரலோக கடவுள் (தேவன்) உண்மையுள்ளவர். நீங்க எங்களை நெருப்புக்குள்ள போட்டாலும் அவர் எங்களை காப்பாற்றுவார். அவர் எங்களை காப்பாற்றாவிட்டாலும் நீங்க நிறுத்தின இந்த சிலையை வணங்கமாட்டோம்' அப்படினு சொன்னார்கள்.



ராஜா அதைக்கேட்டு ரொம்ப கோபப்பட்டு அக்கினியோட அளவை ஏழு மடங்கு அதிகமாக்க சொன்னாரு. அந்த 3 அண்ணன்களையும் கட்டி அக்கினிக்குள்ள போட்டாங்க. ஆனா நெருப்பு அவர்களை ஒன்றுமே செய்யவில்லை. அவர்கள் மூவரோடு 4வதாக ஒருவர் நெருப்பின் மத்தியில் உலாவுவதை ராஜா பார்த்துவிட்டு, 3 பேரையும் வெளியே வரச்சொல்லி, உங்கள் தேவன் மாதிரி இரட்சிக்கிற (காப்பாற்றுகிற) தேவன் யாருமே இல்லைனு சொல்லி, தேவனை மகிமைபடுத்தினார்.

குட்டீஸ்! நீங்களும் அந்த 3 அண்ணன்களை போல, எந்த சூழ்நிலையிலும் தேவனை மட்டுமே வணங்கினால், அந்த பரலோக தேவன் உங்களை காப்பத்துவார். செய்வீங்களா?

**மனன வசனம்** : 1யோவான் 5 : 21

பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களை காத்துக்கொள்வீர்களாக.

**– குயினி பிலேமோன்**

# 2 யோவான் திருமுழுக்குனர்

கடவுளின் செல்லப்பிள்ளைகளே! நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்களா!

இம்மாதம் யோவான் ஸ்நானகன் என்பவரைப் பற்றித் தெரிந்து கொள்ளப்போகிறீர்கள்.

யோர்தான் நதிக்கரையில் பெரியக் கூட்டம் கூடியிருந்தது. 'அங்கே என்ன நடக்கிறது?' என்று எல்லாரும் பார்த்தார்கள் . அங்கே ஒட்டகமயிரை உடையாகவும், தன் இடுப்பில் வார்க்கச்சையையும் அணிந்து கொண்டு, வெட்டுக்கிளியையும், காட்டுத்தேனையும் உணவாக பயன்படுத்துகிற ஒரு மனிதன் நின்று பேசிக்கொண்டு இருந்தார். அவர்தான் யோவான் ஸ்நானகன். இவர் சகரியா, எலிசபெத் என்பவர்களின் மகன். இவரின் பிறப்பு தன் அம்மா, அப்பா மற்றும் எல்லாருக்கும் சந்தோஷம் உண்டுபண்ணியது. இவர், மக்கள் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று சொன்னார். மக்கள், 'நாங்கள் எதில் மனந்திரும்ப வேண்டும்' என்று கேட்டார்கள். பேராசைபடாதிருங்கள், இருப்பவற்றை பகிர்ந்து கொடுங்கள், தீய பழக்கத்தை விட்டுவிட்டு கடவுள் வழியை தெரிந்துக் கொள்ளுங்கள் என்றார். எல்லாரும் மனம் வருந்தி மாறினார்கள்.



நீங்களும் யோவான் ஸ்நானகன் என்பவரைப்போல, உங்கள் அப்பா, அம்மா, சந்தோஷப்படுகிற மாதிரி இருக்கனும். உங்களால் எல்லாரும் சந்தோஷபடனும். இயேசுவைப்பற்றி எல்லாருக்கும் சொல்லி, கடவுள் வழியை தெரிந்துக்கொள்ள உதவிசெய்யனும். செய்வீர்களா?

நீங்கள் இந்த மாதத்தில் என்ன செய்தீர்கள் என்று கடிதம் எழுதி அனுப்புங்கள். கடவுள் உங்களை ஆசிர்வதிப்பார்.

**மனன வசனம் : யாக் 4:17**

ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதை செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

அன்புள்ள அண்ணன்,

**– அன்பு ஏசுதாஸ். எஸ்**

# 3 இயேசுவின் பிறப்பு

அன்புள்ள குட்டீஸ் ! நல்லா இருக்கிங்களா? அக்கா தினமும் உங்களுக்காக ஜெபிக்கிறேன். குட்டீஸ்! நாம் இந்த மாதம் இந்த உலகத்தையும், விலங்குகளையும், மீன்களையும், பறவைகளையும் மற்ற எல்லாவற்றையும், மனிதர்களாகிய நம்மையும் படைத்த ஆண்டவர் இயேசு, மனிதனாக பிறந்ததை பற்றி தெரிஞ்சுக்குவோமா?

தாவீது ராஜாவின் சந்ததியில் வந்த யோசேப்பு என்பருக்கும், மரியாள் என்பவருக்கும் திருமணம் செய்ய நிச்சயம் செய்திருந்தனர். ஒருநாள் மரியாளிடம் தேவதூதன் தோன்றி உனக்கு பரிசுத்த ஆவியானவராலே ஒரு ஆண்குழந்தை பிறக்கும். அந்த குழந்தை கடவுளுடைய மகன் என்றார். மரியாள் தேவதூதன் சொன்னதை ஏற்றுக்கொண்டார். கடவுளுடைய வல்லமையினால் மரியாளின் வயிற்றில் நமது ஆண்டவர் இயேசு



கருவாக உருவானார். மரியாள் கர்ப்பமான செய்தியை கேள்விப்பட்ட யோசேப்பு மிகவும் வருத்தப்பட்டார். மரியாளை திருமணம் செய்வதை தவிர்க்க ஆசைப்பட்டார். அந்த நேரத்தில் தேவதூதன் யோசேப்பின் முன் தோன்றி, யோசேப்பே மரியாளை உன் மனைவியாக சேர்த்துக்கொள். அவளிடம் உண்டாயிருக்கும் குழந்தை கடவுளுடையது' என்றார். யோசேப்பும் மரியாளை தனக்கு மனைவியாக ஏற்றுக்கொண்டார்.

அந்த சமயத்தில் அகஸ்து என்ற ரோம மன்னன் ஆட்சி செய்தார். அவர் தன்னுடைய மக்கள் அனைவரையும் கணக்கு பார்க்க ஆசைப்பட்டார். ஆகையால் மக்கள் அனைவரும் அவரவருடைய சொந்த ஊருக்கு போகும்படி கட்டளையிட்டார். யோசேப்பு யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் ஊரை சேர்ந்தவராக இருந்தபடியினால், கலிலேயாவிலுள்ள நாசரேத் என்னும் ஊரிலிருந்து, நிறைமாத கர்ப்பிணியான தனது மனைவியாகிய மரியாளை அழைத்துக்கொண்டு பெத்லகேம் சென்றார். அங்கே அவர்கள் சென்ற போது, அவர்களுக்கு தங்குவதற்கு சத்திரத்திலே (Lodge) இடம் கிடைக்கவில்லை. ஆனால், அவ்விடத்திலே மரியாளுக்கு பிரசவம் நேரிட்டது. அவள் நமது ஆண்டவராகிய இயேசுவை குழந்தையாக

பெற்றெடுத்தாள். அவர்களுக்கு சத்திரத்திலே தங்க இடமில்லாதபடியினால், சத்திரத்தில் தங்க வருபவர்கள் தங்கள் ஒட்டகங்களை, கோவேறு கழுதைகளை கட்டிப்போட்டு வைக்கும் இடத்திலே இருந்த முன்னணையிலே (தீவனபெட்டி) குழந்தையை வைத்தாள்.

பார்த்தீங்களா குட்டீஸ்! நம்ம ஆண்டவர் உலகமனைத்தையும் படைத்து, அதை காக்கும் கடவுளின் மகனாகவும், கடவுளாகவும் இருந்தாலும், எவ்வளவு எளிமையாக பிறந்தார். ஏன் தெரியுமா? ஆண்டவருக்கு எளிமையாயிருப்பது தான் மிகவும் பிடிக்கும். அதனால் தான் தனது மலைப்பிரசங்கத்தில் இவ்வாறு சொன்னார். நாம் எல்லாரும் சேர்ந்து மனப்பாடம் செய்வோமா!

**மனை வசனம்** : மத்தேயு 5 : 3

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக ராஜ்ஜியம் அவர்களுடையது.

**– பிரியா ஆண்டனி**

---

பாடம் 4

# ஞானிகள்

ஹாய் செல்லங்களா ! தினமும் பைபிள் படித்து, ஜெபிக்கிறீங்களா? நீங்க எல்லாரும் குட் பாய்ஸ் அண்ட் கேர்ல்ஸ் அதனால பையிள் படித்து, ஜெபிப்பீங்கனு நிச்சயம் நம்புறேன். Okay குட்டீஸ்! நாம் இந்த மாதம் குழந்தையாக இருந்த நமது ஆண்டவரை சந்திக்க வந்த ஞானிகளை (சாஸ்திரிகள்) பற்றி தெரிஞ்சுக்குவோமா?



ஏரோது ராஜா அரசாண்ட காலத்தில், எருசலேமின் கிழக்கு திசையில் இருந்து ஞானிகள் வந்து, யூதாருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே? அவருடைய நட்சத்திரத்தை கண்டோம். ஆகையால் அவரை நாங்கள் பணிந்துக்கொள்ள வந்தோம் என்று ஏரோது ராஜாவை பார்த்து கேட்டனர். இதை கேட்டவுடனே ஏரோதும் எருசலேம் நகரத்தார் யாவரும் கலக்கமடைந்தனர். ஏரோது பிரதான ஆசாரியரையும், மூப்பர்களையும் அழைத்து கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பார் என்று விசாரித்தார். அவர்களோ தீர்க்கதரிசனத்தின்படி கிறிஸ்துவானவர் பெத்லகேமிலே பிறப்பார் என்றனர்.

ஏரோது அந்த ஞானிகளிடம் பிள்ளையைக் கண்டபின்பு, நான் அதை பணிந்துக்கொள்ளும்படி அதை எனக்கு

அறிவியுங்கள் என்று சொல்லி அவர்களை அனுப்பினார். அந்த ஞானிகள் கண்ட நட்சத்திரம், பிள்ளை இருந்த இடம் வரைக்கும் அவர்களுக்கு வழிகாட்டியது. அவர்கள் இயேசு இருந்த வீட்டுக்கு உள்ளே சென்று, அங்கே மரியாளையும் குழந்தையாகிய இயேசுவையும் கண்டனர். பின்பு அவர்கள் இயேசுவை பணிந்துக்கொண்டு, அவருக்கு பொன், வெள்ளைப்போளம், தூபவர்க்கம் ஆகியவற்றை காணிக்கையாக கொடுத்தனர். பின்பு ஏரோதினிடத்திற்கு போக வேண்டாம் என்று தேவனால் எச்சரிக்கப்பட்டு வேறுவழியாக தங்கள் நாட்டிற்கு திரும்பினர்.

செல்லங்களா கவனிச்சிங்களா! ஞானிகள் ஆண்டவரை தேடினார்கள், அவரை பணிந்தார்கள், அவருக்கு காணிக்கை கொடுத்தார்கள். நாமும் தினசரி அந்த ஞானிகளை போல ஆண்டவரை ஜெபத்தினாலும், வேத வாசிப்பினாலும் தேடி, நம்மையும், நம்முடையவைகளையும் அவருக்கு காணிக்கையாக கொடுத்து, அவரை பணிந்துக்கொள்வோம். நிச்சயமாகவே தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். நீங்க எல்லாரும் நல்ல பிள்ளைங்க தானே? அப்படினா கீழ இருக்கிற வசனத்தை மனப்பாடம் செய்யுங்க பார்க்கலாம்.

**மனன வசனம்** : மத்தேயு 6:33

முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் : அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும்.

## சிறுவர்க்கான கேள்விகள்





1. நேபுகாத்நேச்சர் நிறுத்தின சிலையின் அளவு என்ன?
2. சிலையை வணங்காதவர்கள் யார் யார் ?
3. காட்டுத்தேனையும், வெட்டு கிளியையும் உணவாக உண்டது யார் ?
4. அவர் மக்களை பார்த்து என்ன செய்ய வேண்டும் என்றார்?
5. இயேசு எந்த ஊரில் பிறந்தார் ?
6. இயேசுவை பணிந்து, அவருக்கு காணிக்கை கொடுத்தவர்கள் யார்?
7. அவர்கள் கொடுத்த காணிக்கை என்ன ?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-08-2014**

# வாலிபர்களுக்கான கேள்விகள்

## எத்தனை? எத்தனை?

1. இயேசு கிறிஸ்து எத்தனை நாட்கள் கல்லறையில் இருந்தார்.

2. பெந்தேகோஸ்தே நாள் என்பது எத்தனையாவது நாள் ?

3. மரியாள் எலிசபெத்து வீட்டில் எத்தனை மாதம் தங்கினாள் ?

4. இஸ்ரவேல் மக்களை, விடுவிக்க தேவன் எகிப்திலே எத்தனை வாதைகளை கொடுத்தார் ?

5. நோவா காலத்தில் எத்தனை நாள் தேசத்திலே மழை பெய்தது ?

6. எத்தனை பேர் (நோவா குடும்பத்தினர்) பேழைக்குள் பிரவேசித்தனர் ?

7. நாகமான் தன் குஷ்டரோகம் நீங்கும்படி எத்தனை முறை தண்ணீருக்குள் முழ்கினார் ?

8. எத்தனை நாட்கள் எஸ்தர் உபவாசம் இருந்தாள் ?

9. I கொரி : 13ல் அன்பு என்ற வார்த்தை எத்தனை முறை இருக்கின்றது ?

10. ஒருவரை ஒருவர் நாம் எத்தனை முறை மன்னிக்க வேண்டும் ?

– பெவர்லி கிங்ஸ்லி

## இம்மாதக் கேள்விகள்



1. சபையை தேவன் எதினாலே சம்பாதித்தார் ?

2. சபையாகிய சரீரத்திற்கு தலையானவர் யார் ?

3. நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் எப்படிபட்டது ?

4. நீர் அனுப்ப சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றது யார் ?

5. அந்திய பாஷை யாருக்கு அடைய மாயிருக்கிறது ?

6. எந்த மனுஷனையும் தேறினவானாகவும், நற்கிரியை செய்ய தகுதியுள்ளவனாகவும் ஆக்குவது எது ?

7. பலவருண அங்கியை யார், யாருக்கு கொடுத்தது ?

8. ஜீவகிரிடத்தை எப்படிபட்டவர்களுக்கு தருவதாக கிறிஸ்து வாக்களித்தார் ?

9. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என கட்டளையிட்டது யார் ?

10. “கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் ” என வாசிப்பதெங்கே ?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-08-2014**

அனுப்ப வேண்டிய முகவரி :

சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத புதில்கள்

| | |
|---|---|
| 1. ஏசாயா 55:9 | 6. ரோமர் 15:22 |
| 2. மத்தேயு 9:13 | 7. பிலி 3:4 |
| 3. 1 சாமுவேல் 16:7 | 8. 2 கொரி 6:2 |
| 4. மத்தேயு 23:26 | 9. 2 கொரி 10:18 |
| 5. யாக் 1:22 | 10. 2 ராஜா 7:9 |

## சிறுவர் பகுதி – புதில் எழுதியோார்

1. Y. ஜெயசுதா – சென்னை
2. ஜ°னித்தா – சென்னை
3. கெவின் கேப்ரியேல் – மதுரை
4. V. ஷைனி – மதுரை
5. V. ஷாலி – மதுரை
6. V. கெனித் சாம் பெஞ்சமின் – மதுரை
7. R. சேம் – உக்கிரன் கோட்டை
8. D. டேனியேல் – மதுரை
9. R. மெர்ஸி இவாஞ்சலின் – சென்னை
10. S. ஜெயராஜ் – பொள்ளாச்சி

## ஏப்ரல் மாதம் பதில் எழுதியவர்கள்

1. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
2. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
3. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
4. Mrs. லாரா ரத்னராஜ் – தூத்துக்குடி
5. Mrs. J. கஸ்தூரி கலாவதி – மதுரை
6. Mrs. மேரி ராஜ் – மதுரை
7. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
8. Mrs.. ரூபி ஜெபராஜ் – மதுரை
9. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
10. Mrs. ஷீலா சுரேஷ் – மதுரை
11. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
12. Mrs. A. சந்திரா – மதுரை
13. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
14. Mrs. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
15. Mrs. புஸ்பா பாலன் – பெங்களூர்
16. Mrs. எப்ஸி தாமஸ் – சென்னை
17. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
18. Dr. D.S ஜெபநேசன் – மைக்கேல்புரம்
19. Mrs. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
20. Mrs. J. விஜய் – வளர்நகர்
21. Mrs. பாக்கிய ரூபி விஜய் – வளர்நகர்
22. Mrs. அ. ஆனிவிக்டோரியா – சென்னை
23. R. சரோஜா – தென்கலம்
24. Mrs. பிலோமினா பிரபாகரன் –காரைக்கால்
25. Mr. இரா. எத்திராஜன் – சேலம்
26. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
27. Mrs. சூர்யா பாண்டி – திருமங்கலம்
28. P. சௌந்தர பாண்டி – திருமங்கலம்
29. Mrs. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
30. R. பால் ஜெயராஜ் – சென்னை
31. Mrs. ஹெலன் திலக் – மதுரை
32. Mrs. ஷில்லா தாஸ் – சென்னை
33. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
34. தேவி ராஜாசிங் – திருப்பூர்
35. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
36. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
37. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
38. Mrs. மெர்ஸி ரூபஸ் – சேலம்
39. Mrs. G. மல்லிகா – மதுரை
40. Mrs. ரேச்சல் ஜீவகாந்தி – சேலம்
41. G. விஜய் சந்திரா – கோவை
42. S. ஜெயராஜ் – பொள்ளாச்சி
43. R. மெர்சி இவாஞ்சலின் – சென்னை

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

## ஜெபியுங்கள்

அன்பு வாசகரே! மாதந்தோறும் J.C. School of Evangelism சார்பாக சபையின் விசுவாசிக்களுக்கு அளிக்கப்படும் ஆத்தும ஆதாய பயிற்சிக்காக ஊக்கமாக ஜெபியுங்கள். இந்த 18 மாத பயிற்சி தற்சமயம் திண்டுக்கல், குன்னூர், மிரயலகுடா (தெலுங்கானா), கொச்சின், சென்னை, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் நடைபெறுகின்றது. இதன் மூலம் விசுவாசிகள் ஆண்டவரின் ஏக்கத்தை நிறைவேற்றும் தாகத்தை பெற்றிட தினந்தோறும் நீங்கள் 1 நிமிடம் **ஜெபிப்பீர்களா?**

## Gospel Through Media by World Evangelism Team

- Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :
  Every Sunday 6.45 - 7.00 a.m and Every Friday 6-00 a.m . - 6-30 a.m.
  (TAMILNADU Contact Mobile : *92 4421 4421 & 92 4431 4431)*
- Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV
  Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m.
  and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382
- Arjunan in Tamil on Tamilan TV & Radio :
  TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m.
  Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio.
  (TAMILNADU Contact Mobile : 94435 58041)
- Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :
  Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m.
  Rakshana T.V : Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m.
  (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)
- P.R. Swamy & Douglas in Tamil on Radio :
  Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band
  of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)
- P.K. Varghese in Malayalam on JaiHind TV
  Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.
  (KERALA Contact Mobile : 94470 35465)
- Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :
  Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.
  (NEW DELHI Contact Mobile : 098108 96789)






ஏழை மற்றும் திக்கற்ற பார்வையற்றோருக்கு மாதந்தோறும் அரிசியும், கிறிஸ்துவின் வசனத்தை அறிந்துகொள்ள டாக்கிங் பைபிளும் வழங்கப்படுகின்றது.



பார்வையற்றோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ப்ரையில் பத்திரிக்கை, பாடங்கள் மற்றும் புதிய ஏற்பாடு ஆடியோ கேசட்



ஒரிசா மாநிலம் கோபால்பூரில் சமீபத்தில் வசனத்திற்கு கீழ்படிந்த வாலிபர்





ஒத்தகடை கிறிஸ்துவின் சபையின் சார்பாக ஞாயிறு வேதபாடபள்ளி மாணவ, மாணவியருக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டது.





தெலுங்கான மாநிலம் மிரயலகுடாவில் நடைபெறும் ஆத்தும ஆதாய பயிற்சி வகுப்புகள்



நமது மாத பத்திரிக்கையை தயார் செய்து அனுப்பும் Volunteers

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2001/14161
Postal Registration No. : MA/67/2012-2014
Posted at Arasaradi HPO on 10th, 11th July 2014






கடந்த மே 20 அன்று கர்த்தருக்குள்
நித்திரையடைந்த
சகோ. **சண்முகம்**
(முதல்வர், பார்வையற்றோர்
வேதாகம பயிலகம் – புதுக்கோட்டை)
அவர்களின் குடும்பத்திற்கு நமது இதழின்
சார்பாக ஆறுதலும் ஜெபங்களும்

***If undelivered please return to :***
**EDITOR**
**KIRUBAIYULLA VARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street,
Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421
92 4431 4431

**To**